# மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்,
# போச்சம்பள்ளி

**OS. 1/2014 . நாள்.04.12.2023**

போச்சம்பள்ளி மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டடது. சாட்சி திறந்த நீதிமன்றத்தில் அழைக்கப்பட்டு ஆஜர். நீதிமன்றத்தில் கிரேடு 3 பென்ச் கிளர்க் திரு.ராமன் அவரால் சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டது. உரிமையியல் விசாரணை சட்டம் பிரிவின் கீழ் விசாரணை செய்யப்பட்டார்.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | கீதா | வயது | 50 |
| த/பெ. க/பெ. | பிரகாஷ் | மதம் | |
| முகவரி | மத்தூர் | தொழில் | |

<u>**வா.சா.1 ஆஜர். 1,2 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**</u>

வழக்கு சொத்தின் சர்வே எண்கள் நினைவில் இல்லை. வழக்கில்தாக்கல் செய்துள்ள கிரைய ஆவணம் எனது தாத்தா கோவிந்தசாமி மற்றும் எனது பாட்டி கமலம்மாள் பெயரில் கூட்டு கிரையப்பத்திரம் என்றால் சரிதான். கோவிந்தசாமிக்கு 1 மகன் மற்றும் 1 மகள் வாரிசாக உள்ளார்கள். அவர்கள் பெயர்கள் பக்தவச்சலம் மற்றும் சரஸ்வதி ஆகும். சரஸ்வதி இறந்து 10 வருடங்கள் ஆகிறது. எனது தாத்தா இறந்து 18 வருடம் ஆகிறது. எனது பாட்டி இறந்து சுமார் 17 வருடம் ஆகிறது. எனது தாத்தாவும் பாட்டியும் இறந்த பிறகு அவர்கள் எழுதிய உயில் படி சொத்தை எனது தந்தை அடைந்தார் என்றால் சரிதான். வழக்கு சொத்தின் வருவாய் துறை ஆவணங்கள் எனது தாத்தா பெயரில் தான் தற்போது வரை உள்ளது. தாவா சொத்தின் பட்டா எனது தந்தைபெயரில் உள்ளது. அது வ.சா.ஆ.2 ஆகும். வா.சா.ஆ. 2 ஆவணத்தில் கண்ட முழு சொத்திற்கும் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். அந்த சொத்தின் விஸ்திரனம் 5 ஏக்கர் ஆகும். எனது தகப்பனார் பக்தவச்சலம் இறந்து விட்டார். எனது தகப்பனார் உயிருடன் இருந்த போது எனது தந்தை ரம்யா பெயருக்கு வழக்கு சொத்தை தானம் எழுதிகொடுத்துள்ள விவரம் எனக்கு தெரியாது. எனது கணவர் பெயர் பிரகாஷ் ஆகும். பிரதிவாதிகள் தாக்கல் செய்த எதிர்வழக்குறையில் எனது தம்பி 2 ம் பிரதிவாதி மூர்த்தி பெயரிலும் எனது தங்கை ரம்யா 3 ம் பிரதிவாதி பெயரிலும் தான பத்திரம் எனது தகப்பனார் எழுதி கொடுத்த வவிரம் கூறப்பட்டுள்ளது. இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்ட பிறகு எனக்கு தெரியும்.

வழக்கு தாக்கல் செய்த போதே ஊத்தங்கரை சார்பதிவக அலுவலக ஆவண எண். 588/2013 செல்லாது என்று நான் பரிகாரம் கேட்டுள்ளேன் என்றால் சரிதான். வழக்கு தாக்கல் செய்ததற்கு முன்பே தான பத்திரம் விவரம் எனக்கு தெரியும் என்று சொன்னால் சரியல்ல. தெரியாது என்று பொய்யாக சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. எனது தம்பி பெயரில் எனது தகப்பனார் ஊத்தரங்கரை சார் பதிவகத்தில் 2013 ம் வருடம் எழுதி கொடுத்த தான பத்திரம் செல்லாது என்று பரிகாரம் கேட்டுள்ளேன் என்று சொன்னால் சரிதான். எனது தகப்பனார் 2,3 பிரதிவாதிகளுக்கு எழுதிகொடுத்த தானப்பத்திர விவரத்தை என்னிடம் சொன்னார். வ.சா.ஆ.5 ஆவணம் எனது தந்தை

எனது சகோதரர் மூர்த்திக்கு எழுதி கொடுத்த தானப்பத்திரத்தை நான் தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரிதான். சாந்தா எனது தாயார் ஆவர். வ.சா.ஆ.5 ஆவணத்தில் எனது தாயர் . நான் எனது சகோதரி ரம்யா ஆகியோர் கையெழுத்து செய்து உள்ளேன் என்று சொன்னால் அது பற்றி தெரியாது. கவிதா எனது தங்கை ஆவர். அவரது கணவர் பெயர் மணி ஆகும். எனது தகப்பனார் அவர் பெற்றோர் மூலம் கிடைத்த சொத்துக்களை அனுபவித்து வந்து பினனர் தனது மூர்த்திக்கும் மகள் ரம்யாவுக்கும் தானப்பத்திர்ம் எழுதி வைத்துள்ளார் என்றும் அதில் பாகம் கேட்க எனக்கு உரிமை இல்லை என்று சொன்னால் சரியல்ல. அந்த குடும்பத்தில் பிறந்தேன் என்பதற்காகவே வழக்கு சொத்தை பொறுத்து எனக்கு எவ்வித உரிமையும்ம உருவாகது என சொன்னால் சரியல்ல. வழக்கு சொத்தில் மூர்த்தி தற்போது ஒரு மெத்தை வீடு கட்டி குடியிருந்து வந்தார் என்றால் சரிதான். அந்த மெத்தை வீடு கட்டி சுமார் 10 வருடம் ஆகிறது என்று சொன்னால் சரிதான். அதன் மதிப்பு எனக்கு தெரியாது. மேற்படி விவரத்தை நான் வழக்குரையில் கூற வில்லை என சொன்னால் சரியல்ல, அவ்வாறு கூறியதாக பொய்யாக சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. வழக்கு சொத்தின் மூர்த்தி மற்றும் ரம்யாவுக்கு பாத்தியப்பட்ட தான சொத்தில் எனக்கு எவ்வித பாக உரிமையும் கிடைக்க உரிமை உள்ளது என்று சொன்னால் சரியல்ல. வழக்கில் ரூ. 30,000 என காட்டி மெத்தை வீட்டின் விவரம் குறிப்பிட்டுள்ளது பொய்யானது என சொன்னால் சரியல்ல.

சாட்சி கூறியதை என்னால் தட்டச்சருக்கு
கூறப்பட்டு சாட்சியின் முன் சாட்சிக்கு படித்து
காட்டி சாட்சியால் படிக்கப்பட்டு, சரியென
ஒப்புக்கொண்டார்.

S V SHANMUGANATHAN
District Munsif cum Judicial Magistrate
Digitally signed by S V SHANMUGANATHAN
Location: Pochampalli

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நடுவர், போச்சம்பள்ளி. கிருஷ்ணகிரி மாவட்டம்.